1982 மார்ச் 2]

வேதாரண்யம்—திருத்துறைப்பூண்டி சாலை.

*வினா எண். 313—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம்—திருத்துறைப்பூண்டி சாலையை இருவழிப் பாதையாக்கும் திட்டம் அனுமதி கோரி அரசிற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தை 1982—83 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டமாக எடுத்துக் கொள்ள பரிசீலிக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : அந்தச் சாலை தஞ்சை மாவட்டத்தில் மிக முக்கியமான சாலையாகவும், இன்று பெட்ரோல் கிடைக்கக்கூடிய பகுதியாக அந்தச் சாலை அபிவிருத்தியடைந்து அந்தப் பகுதிக்கு வசதி அளிக்கும் சாலையாகவும் இருப்பதால் இந்த ஆண்டே உடனடியாக அதைச் செய்தால்தான் வருங்காலத்தில் திட்டத்தை அமல்படுத்த உதவியாக இருக்கும். அந்த வகையில் அதை நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான மாவட்ட நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தால்தான், இதை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே பெட்ரோல் தொழிற்சாலை வரயிருக்கிறது ; அதேபோல் மெரைன் காம்பிளக்ஸ் வரயிருக்கிறது. இந்த இரண்டு முக்கியமான தொழிற்சாலைகள் அந்தப் பகுதியிலே வரயிருக்கின்ற காரணத்தால், தஞ்சாவூர் வரையிலும் அந்தச் சாலையை விரிவுபடுத்தி, அகலப் படுத்துவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ? அப்படியில்லையெனில், அரசு அதைப்பற்றி பரிசீலிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, முதற் கேள்விக்கு விடை இல்லை. இரண்டாம் கேள்விக்கு விடை பரிசீலிக்கப்படும்.